DEPOSITON OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC.171/2019 |
| Deposition of Witness | { PW.12 |
| | { Prosecution |
| | { |

| | |
|---|---|
| Name | : ரங்கநாதன் |
| Father's Name | :--- |
| Taluk | :--- |
| Calling | :--- |
| Religion | :--- |
| Age | :--- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.01.2025.

2025 ம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.12 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

4, 12, 15 மற்றும் 22 ம் எதிரிகள் ஆஜரில் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. மற்ற எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

முதல் விசாரணை

நான் வெள்ளையன்பாளையத்தில் குடியிருக்கிறேன். நான் பத்திர எழுத்தர் தொழில் செய்கிறேன். கோரணம்பட்டியை சேர்ந்த சடையன் மற்றும் அவரது மகன் முருகேசன்

ஆகியோரை எனக்கு தெரியும். அவர்கள் கடந்த 2000 ஆம் ஆண்டு சடையன் என்பவருக்கு கிரையப்படி பாத்தியப்பட்ட சொத்தினை அவரது மகன் முருகேசனுக்கு 2.29 ஏக்கர் நிலத்தை தானசெட்டில்மெண்ட் செய்து வைக்க வேண்டும் என்று கேட்டு என்னிடம் வந்தார்கள். அவர் கேட்டு கொண்ட படி நான் 2000 ஆம் ஆண்டு தேதி, மாதம் நினைவில்லை ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் தயார் செய்து பதிவு செய்து கொடுத்தேன். அதன் பிறகு 2006 ஆம் ஆண்டில் அதே நபர்கள் சடையனுக்கு மீதம் இருந்த சொத்தையும் முருகேசன் பெயரில் தானசெட்டில்மெண்ட் செய்து வைக்க வந்தார்கள். அப்போது நான் தான் தானசெட்டில்மெண்ட் பத்திரம் தயார் செய்து பதிவு செய்து கொடுத்தேன். இது சம்பந்தமாக சேலம் மாவட்ட குற்றபிரிவு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/-ரங்கநாதன்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.